உ

சிவமயம்.

ஆலமுண்டோன் பாலனுண வேலுமயிலும் வருக !! வருக !!

ஸ்ரீ ஹரிபூத நாதன் மீது

# மனவுல்லாச பக்திரஸ கீர்த்தனம்.

நாகபட்டணம் தாலுக்கா' குருச்சி போர்டு எலிமெண்டரி ஸ்கூல் ஹெட்மாஸ்டர் யஸ். யன். நடராஜ நாயஞரின் மாணுக்கர்லோருவரும் ஷை தாலுக்கா நிர்த்தன மங்கலம் V. I. துரைஸாமி நாயஞரின் குமாரரும் ஷை தாலுக்கா அழிஞ்சிமங்கலம் கவர்மேண்ட் எலிமேண்டரி ஸ்கூல் ஹெட்மாஸ்டருமாகிய

V. I. D. அம்பலவாண நாயஞர்

இயற்றப்பட்டதை

திருத்துறைப்பூண்டி தாலுக்கா, நீர்முளை

நேட்டிவ் டாக்டர் ஸ்ரீமான்

பி. உ. அல்லாபிச்சை [ராவுத்தர் அவர்கள்

பார்வையிடப்பெற்று,

நாகை ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை) 1924 (அணு 1

உ

சிவமயம்.

ஸ்ரீமுகி, ஸ்ரீமான்

பி. உ. அல்லாபிச்சை ராவுத்தர் அவர்கள் இயற்றப்பெற்ற

## சாற்றுக்கவி.

வெண்பா.

சந்ததமும் செந்தமிழை சாற்றும் அம்பலவாணன்
சுந்தரஞ்சேர் பாக்கள் சொல்க்கேட்டேன்—விந்தைமிகும்
பாலோடு தேனும் பாகும் கனி ரஸமும்
நாளுங் குவிந்ததென நாட்டு.

வெண்பா.

### விநாயகர் துதி.

கொன்றை தும்பை வில்வமணி கோமான் குலமுதலாய்
என்று மழியாப் பொருளாய் எங்கெங்கும்—நின்றிலகும்
தந்திமுகசத்தைங்கரனே தமிழ்பாடத் தமிழெனவே
தந்துனருள் தாளடியைத்தா.

பொன்னுலகோர் சிறைதவிர்த்து புகழ்யானை தனைமணந்து
துன்னுமடியார்களிரு துயர்நீக்கும்—மன்னவனே
நல்லவரமருளும் நற்குருவே கங்குகனே
அல்லலறுத்தென் தனையுமாள்.

(1) சிங்கார வேல்முருகா என்ற மெட்டு.

1. ஐங்கரவிநாயகனே எங்குமுன்னாய் நின்றவனே
மங்களபார்வதியின் சுதனே சுதனே சுதனே.

2. முக்கனியும் சர்க்கரையும் மோதகமுடன் பொரியும்
பக்குவமாய்யானுனக் களித்தேன் அளித்தேன் அளித்தேன்

3. தேனே தேஜோன்மயமே தெய்வப்பிரணவமே
கோனே சைவக்குலக் கொழுந்தே கொழுந்தே கொழுந்தே.

4. செந்தமிழா லுன்னறிய சேவடியைப்போற்றுதற்கு
எந்தவேளை தனிலும் வந்தெனையாள் எனை ஆள் எனை ஆள்.

5. யானைமுக மானவனே யானுமுன்பாதம் பணிந்தேன்
மோனமுத்தமிழுனக் கருள்வாய் அருள்வாய் அருள்வாய்

6. கையால் மெய்யைப்பொருத கந்தனென பேறுபெற்ற
துய்யன்முன்னவனே நின்னருள்தா அருள்தா அருள்தா.

7. பேழைவயர் கொண்டவனே ஊழைபொழிப்பவனே
ஏழைமனக்கோழையை அறுப்பாய் அறுப்பாய் அறுப்பாய்

8. மன்றுதனிலாடுமீசன் மாதவர்கள் போற்றும் நேசன்
கன்றே கருணாகரக் கனியே கனியே கனியே.

9. அனைபிதாகுருவோ டென்னையு முன்னடியிற்சேர்க்க
முன்னை வினைதனை இனி தீர்ப்பாய் தீர்ப்பாய் தீர்ப்பாய்.

10. நடராஜன் அடிமைஐயா நானம்பலவாணன் மெய்யா
நடனமுடனே அருள் தருவாய் தருவாய் தருவாய்.

(2) தெள்ளுதமிழ்க்குதவும் சீலன் என்ற மெட்டு.

சாமளமயில்குகந்த வாசன்-வள்ளி
கோமளகுணாள குமரேசன்-குருவானமுருகேசன்புகழ்
நானிலத்தில் மீதுரைக்கப்
போமோ நிறைவாமோ.

அத்திமுகனுக்கிளைய கர்த்தன்-சத்தி
புத்திரன்வேலாயுதனும் சுத்தன்-தனை
நித்தமும் நாம் பத்தியுடன் சுத்தியமைந்தால்
கருணை தருவார்-வரமருள்வார்.

ஆலாலமுண்ட சிவன் மைந்தன்-நீல
ஆலனந்தன் மருமகனே வந்தான்-சூல
மான்மழுவை ஏந்திநின்று
காலன்தனையே யுதைத்தோன் பாலா-வடிவேலா.

ஐந்துநான்கும் மூன்றும் ரெண்டும் ஒன்றே-இதை
ஆதரித்துயிர்த்திடுவீர் நன்றே-குற
மாமகளைத் தானணைய ஞாபகம் உரைத்தவரின்
பெயரே சொன்னேன் இவரே.

ஆனந்தமூலிதனே யுண்டே-வீணாய்
அலேகுருர்களேதெருவில் கின்று-பேர்
ஆனந்த லட்சணத்தை அன்புடனே ஓதிடினும்
அறியார் வீணர் தெரியார்.

ஷண்முகனே யுன் துணேவேறில்லே-என்மேல
உன்னருள்சுரந்தால்போமே-தொல்லே
ஏழை நடராஜனின் அடிமைக்குண
மணமாகியம்பலவாணனேக்காரு-வினே தீரு.

(3) இந்தக்கைக்குட்டையைப்போலே என்ற மேட்டு.

ஐயா உனேநம்பினேனே அருள்
செய்வாயீராறுகையோனே
வையகமீதில்முன் செய்யா வினேகளே
செய்து இன்னுள்வாடி சேயனுனேத்தேடி (ஐ)

திங்கள்கங்கை வேணியரன் மைந்தா-சிவ
சங்கரர்க்குகந்த திரு கந்தா
செய்யநின் திருவடி துய்யனுயான் பெற
மெய்யா யெனதுமனம் நையாதருள்புரிய (ஐ)

ரெத்னமணி கிரீட ஜோதி-உனே
இத்தரையில் யாரறிவார் நீதி
உத்தமனே எனக்குன் சித்தமிரங்கலேயா
சுத்தமனமாக நித்தமு நினேத்தொழுத (ஐ)

ஆனந்தத் தாண்டவ மாண்டி-கொடும்
ராவணிக் தோனண்டர் வேண்டி
ஞானமுகமாரா யீனஅசுரர்குலம்
தானே கருவறுத்த கோனே குமரேசா (ஐ)

சர்பகர்சேர் சிற்றூர் தானே-என்குரு
யஸ். யன். நடராஜன்சொல் தேனே
விர்ப்பமுடன் பாசெய்தேன் வி. ஐ. டி. ஏ. விலாசன்
தர்ப்பரா எந்தன்வினே வர்ப்புறுத்தாமல் நீக்க (ஐ)

(4) எந்தவிதந்தனி லுன்துணை தந்தாள என்ற மெட்டு.

பல்லவி.

1. அஞ்சமுகத்தோற்கு ஆறுமுகத்தோனே
அஞ்சி உளம்வாடினேன்-உனை
தஞ்சமென நாடினேன்.

அநுபல்லவி.

2. காரும் அடியேனை பாராதிருப்பதேன்
கந்தனே வந்தெனை இந்தலோகந்தனில்
காராய் கருணாகரா-வினை
தீராய் கடைக்கண்பாராய்

3. பொய்யாம் புவியாசை மையல் தனில்மனம்
போக்கிமெய் நீக்கிசிற்
பாக்ய மாக்கிடாது.
சேரும்பரங் குன்றோனே-திருவடி
தாரும் உமை மைந்தனே

4. அண்டர்புகழ்நாதா தொண்டராடிதா
வண்டுதேன் கண்டதை
உண்டிட லுண்டினி.
கண்டுன் கரைசேர்வேனோ-எந்தன்
பண்டு குறைதீர்வேனோ

5. வெள்ளை விடையேறும் விமலனருள்பாலா
வேலா வுமைபாலா
மேலாம் மறைநாலா.

வேண்டி யுனைப்பணிவேன்-எனை
ஆண்டா லுளங் குளிர்வேன்

6. கங்குல்பகலாயுன் கஞ்சமலரடிநாடிமெய் வாடி
கொண்டாடி முன்பாடிடும்
எஸ். யன், நடஜரு னின்-சிஷ்ய
காளமபலவாணனே.

(5) பாண்டியன் ஈன்ற மீனாக்ஷி என்ற மெட்டு.

சங்கரன் ஈன்ற ஷண்முகனே வேல்குகனே
சரஹணபவனே
மங்கை மால் தனக்குமருகோனே
செந்தூரில் வாழுமுருகோனே
தொகையரு.

மாய்கை சாகரத்தில் மைந்தன்யான் ஆண்டிட
மௌனமுற்றிருப்பதன்றோ
மங்களகல்யாண மணாளனே மயிலேறி
வரம்தந்து ஆள்வதன்றோ.
பாட்டு.

தஞ்சம்நீ ஆள்வதுன்பாரம்
சேயன்மேல் கொள்வதேன்கோரம்.
தொகையரு.

சூரசம்ஹாரனே வீரர்புகழ் தீரனே
சிவசுப்ரமண்ய தேவா
இந்தையின் துயர்தீர வந்தெனக்கருள்
புரிவதற்குவேறில்லை வாவா.
பாட்டு.

பணிந்தேன் பாலன் வி. ஜ. டி. ஏ. செந்தமிழ்
பதமருள்வாய் நீயே.

## மகாவிஷ்ணுவின்மீது பாடியது துதி.

(6) ஓதிருநல்லூர்வளரோய்யாரா என்ற மெட்டு.

மாதிருவ ரெக்கமுறை வேதா-தமிழ்
மாமறை முழங்குஞ்செவி போதா-புகழ்
மாதவனே துளபமணி நீதா-கதிர்
மாலாகிய கோலாகல
சீலாவனுகூலா வரும்.
மானிலத்தில் ஏழையிடம் வாதா-நீல
மேனியனே தூயஉளம் தாதா

தாடகைசம்மாரதீர கையா நின்கல்
தான் அகலியை மகிழ்செய் ஐயா-சிலை
தனைவளைத்து ஜனகியைக்கொள் மெய்யா
வரம்தாராய் அருள் சேராய்
முகம் பாராய் கலிதீருய்-இனி
தாமதமில்லாது இச்சை தய்யா-ராம
நாமமக்ர சங்கு சக்ர கையா.

தோல்நரம்பெலும்புதசை கூடே-வஞ்சத்
தோகையரின் மோகமுறும் வீட்டே-அதைத்
தொந்தமென நம்பியுழல்மாடே-மாயைத்
துடராமலே திடமாமதிர்
இடமேததி உடனேததி.
தூதர் அணுகாது புகல்பேடே-கரி
திதறுத்த மாயன் பதம் பாடே.

ஆலிலைமஞ்சம்துயிலும் தேவா-என
தன்னைதிருமகளுடனே வாவா-ஆளும்
அம்பலவாணன் குறையைக் காவா பெரும்
ஆசைக்கடல் வீசித்திரை மாசத்துரா கேசித்தென்னை
ஆதரிக்கும் தாம கோவிந்தாவா
வாமூதறிவுலாவர்கணுதேவா,

## வாழி விருத்தம்.

ஒப்பரிய ஒளிமதியும் ரவியும் வாழ்க
உலகதிய பெணையீன்ற அன்னை வாழ்க
இப்புவியில் தந்தையுமென் குருவும் வாழ்க
எண்ணரியத் தொண்டர் திருவடியே வாழ்க
துப்புரவே அரக்கர்குல மறுத்தோன் வாழ்க
தோகைவள்ளி தெய்வானை மயிலும் வாழ்க
செப்பரியக் குருவருளும் குணமும் வாழ்க
சேயனம்பலவர்ணன் செய்தபாவின்
தப்பதனைப் பொருத்தாசிர் வதிப்போர்வாழ்க
தகைமையுள்ள புலவர்களொண்ணூறும் வாழ்க
அற்புதமாம் முத்தமிழின் அரசிதன்னை
அன்புடனே துதித்தறிவோர் வாழ்க வாழ்க.

சுபம். சுபம். சுபம்.

இப்புத்தகம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்:—

V. I. D. அம்பலவாண நாயனார்,
நிர்த்தனமங்கலம்.
நாகபட்டணம் தாலூகா, சிக்கல் வழி.
S. I.

ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸ், நாகை, 24-350.